
'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVI மார்ச் கி.பி. 2025 சான்று : 183



# வட்டாரத் தியானக் கூட்டங்கள்



கமுதி



சி.கே. மங்கலம்



செக்காலை



சி.கே. மங்கலம்



மகிண்டி மிக்கேல்பட்டணம்



செஞ்சை






பாசத்திற்குரிய உடனு ழைக்கும் நற்செய்திப் பணி குடும்பமே.

நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் (களப்பணி செல்கிறேன்) என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய (களப்பணிக்குச் செல்ல வேண்டிய) கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் (களப்பணிக்குச் செல்லாவிடில்) ஐயோ எனக்கு கேடு (1கொரி 9:16) என்ற இறை வார்த்தை என்னையும் உங்களையும் தூண்டி எழுப்ப, எழுந்து பிரகாசிக்க செபிக்கிறேன், வாழ்த்துகிறேன்.

நம்மில் பலர் களப்பணியை, நாம் செய்வது போல் எண்ணி செல்கின்றனர். செல்வது மட்டும் தான் நம் வேலை. 'போ' என்கிறார். போகிறோம். ஆனால் அங்கே விடுதலையைத் தருகிறவர் கடவுளே. அனுப்புகிறவர் அவர் என்பதால் அனைத்தையும் அவர் பார்த்துக் கொள்வார் என்று உறுதியாக நம்பிச் செல்வோம். அவரது முதன்மையான, முக்கியமான, உயர்ந்த கட்டளைக்கு (மத் 28: 19) கீழ்ப்படிந்து செல்வது மட்டும்தான் நம் வேலை. நாம் தன்னார்வ நற்செய்திப் பணியாளர்கள் என்றாலும் இது கட்டாயப் பணி; நம்மேல் சுமத்தப்பட்ட கடமை; நம்மேல் சுமத்தப்பட்ட பொறுப்பு. அதே நேரத்தில் எப்படிச் செல்ல வேண்டும் என்று சென்ற இதழில் விளக்கமாகத் தியானித்தோம். கீழ்ப்படிந்து, இறை வேண்டலுடன், அன்பால் நிறைந்து, இருவர் இருவராக, தகுந்த தயாரிப்பு மற்றும் துணைக் கருவிகளுடன், ஆழமான அசைக்க முடியாத நம்பிக்கையுடன், கனிவோடு, தியாகத்தோடு, துணிச்சலோடு போக வேண்டும் என்று தியானித்து களப்பணிக்கு செல்ல தயார் நிலையில் இருக்கிறோம். மார்ச் 9ஆம் தேதி முதல் நம் களப்பணி தொடங்க இருக்கிறது.

என்னிடம் களப்பணி புரிய போதுமான மனநிலை இல்லை, திறமை இல்லை, அது தெரியவில்லை, இது தெரியவில்லை என்று புலம்புவதை நிறுத்திவிட்டு நம்மை அனுப்புகிறவர் எல்லாம் வல்லவர். அவர் தான் செயலாற்றுகிறார் நான் ஒன்றும் இல்லை என்ற எண்ணத்தை மனதில் கொண்டவர்களாய் களப்பணிக்குச் செல்வோம். எவற்றோடு போக வேண்டும் என்று சென்ற இதழில் தியானித்தோம். எவை இல்லாவிட்டாலும் போக வேண்டும் என்று இந்த இதில் தியானிப்போம்.

**1. பரிவு இல்லாவிட்டாலும் போவோம்:** நற்செய்திப் பணிக்குப் பரிவோடு தானே போக வேண்டும் அது இல்லாவிட்டாலும் போவோம் என்பது முரணாக இருக்கிறது என்று நினைக்கலாம். நம்மிடம் பரிவு இல்லாவிட்டாலும், நம்மை அனுப்பும் கடவுளுக்கு பரிவு உண்டு (மத் 9: 36, மத் 14:14) நம் பரிவைக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. இயேசுவின் பாடுகளை, மக்கள் படும் வேதனைகளை, நோயினால் துன்புறும் மக்களை, பாவத்தினால் மக்கள் அடையப்போகும் கேடுகளை நாம் சிந்தித்தால் களப்பணிக்குச் செல்லாமல் நம்மால் இருக்க முடியாது.

**2. ஆற்றல் இல்லாவிட்டாலும் போவோம்:** கடவுளே நம் ஆற்றலாக இருக்கிறார். கடவுள் நம் விருப்பத்தை, செயல்பாட்டைத் தான் பார்க்கிறார். நாம் களப்பணிக்கு செல்ல வேண்டும். மற்ற அனைத்தையும் கடவுள் பார்த்துக் கொள்வார் அணிவகுத்து நின்றாலே போதும் (2 குறி 20: 12, 15, 17)நாம் செல்ல வேண்டும். கடவுள் தன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவார் அவர் உடனிருந்து செயல்படுவார் (மாற் 16: 20) ஆவியானவர் எல்லா ஆற்றலையும் வழங்குவார். அவரே' உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல, ஆனால் எனது ஆவியாலே ஆகும் (செக்

4: 6) என்று சொல்லி இருக்கிறாரே! நாம் ஏன் அதைப்பற்றி நினைக்க வேண்டும். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு (பிலி 4:13) என்ற நம்பிக்கையோடு செல்வோம். எனவே நாம் செல்கிறோம் என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது. அப்படி உரிமை பாராட்ட நமக்குத் தகுதி இல்லை. அந்தத் தகுதி கடவுளிடமிருந்து வருகிறது (2கொரி 3:5) என்பதை புரிந்து கொண்டு. சோர்ந்து விடாமல் களப்பணிக்கு செல்வோம்.

**3. ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் போவோம்:** நம்மை அனுப்புவது கடவுள். எனவே நம்மை ஏற்றுக் கொள்ளவில்லை என்று புலம்பாமல் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் செல்வோம். அவர்கள் செவி சாய்த்தாலும், சாய்க்காவிட்டாலும் நீ என் சொற்களை அவர்களுக்கு எடுத்துக் கூறு (எசே 2:7)என்று கடவுள் கட்டளை கொடுத்துள்ளார். எடுத்துக் கூற வேண்டியது மட்டுமே நம் பணி. நமது பணி என்ன வென்று நமக்குத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளாவிட்டால் நமக்கு அதைப் பற்றி கவலை வேண்டாம் (மத் 10 14).

**4. முழுமையான திருவிவிலிய அறிவு இல்லாவிட்டாலும் போவோம்:** திருவிவிலியக் கடவுள் நம்மோடு இருக்கிறார். அவர் என்ன சொல்லச் சொல்கிறாரோ அதைச் சொல்வோம்(எரே 1:6-8). ஆடு மேய்க்கிற ஆமோஸை கடவுள் இறைவாக்கினராக பயன்படுத்தவில்லையா? (ஆமோ 7 :14.15) எனக்கு ஒன்றும் தெரியாதே என்று கலங்க வேண்டாம் கடவுள் பார்த்துக் கொள்வார். காலியான பாத்திரத்தில் தான் நிரப்ப முடியும். நிச்சயம் நிரப்புவார். இது அவருடைய பணி. எனக்கு இறை வார்த்தை தெரியாதே என்று வருத்தப்பட வேண்டாம். அனைத்தையும் அவர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் செல்வோம்.

**5. சூழ்நிலைகள் சாதகமாக இல்லாவிட்டாலும் போவோம்:** காற்று தக்கவாறு இல்லை என்று காத்துக் கொண்டிருப்போர் விதை விதைப்பதில்லை. வானிலை தகுந்தபடி இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்போர் அறுவடை செய்வதில்லை (சஉ 11 :4) என்று திருவிவிலியம் கூறுகிறது. அப்படி என்றால் என்ன செய்ய வேண்டும்? காலையில் விதையைத் தெளி. மாலையிலும் அப்படியே செய். அதுவோ இதுவோ எது பயன் தரும் என்று உன்னால் கூற முடியாது. ஒருவேளை இரண்டுமே நல்ல விளைச்சலைத் தரலாம் (ச உ 11: 6) என்றும் திருவிவிலியம் கூறுகிறது. நம் பணி களப்பணிக்குச் சென்று அறிவிப்பதுதான். விளைச்சல் பற்றி நமக்கு கவலை வேண்டாம். கடவுள் பார்த்துக் கொள்வார்.விதைப்பவர் உவமையை வாசித்து புரிந்து கொள்வோம் (மாற் 4:26-29) கடவுள் பெயரால் நாம் காட்டிய அன்பையும், உழைப்பையும் கடவுள் மறக்க மாட்டார் (எபி 6: 10) நிச்சயம் பலன் உண்டு.

துன்பங்கள் அனைத்திலும் வான தூதர்களை வைத்து அல்ல. நேரடியாகத் தானே தன் அன்பினாலும். இரக்கத்தினாலும் மக்களை தூக்கி சுமந்த கடவுள் (எசா63: 9) கழுகுகளின் இறக்கைகளின் மேல் மக்களை ஏந்தி சுமந்து காத்த கடவுள் (விப 19: 4) ஒருவன் தன் மகனை தூக்கிச் செல்வது போல மக்களை தூக்கி சுமந்த கடவுள் (இச1:31) பாலுண்ணும் குழந்தையை ஏந்தி செல்பவர்கள் போன்று மக்களை மார்போடு ஏந்தி சுமந்த கடவுள் (எண் 11:12) இன்றும் நம்மை சுமந்து காக்கிறார் என்ற உணர்வோடு களப்பணிக்கு வெற்றி ஆர்ப்பரிப்போடு செல்வோம். மூவொரு கடவுள் நம்மோடு இருக்கிறார். ஒருவருக்கொருவர் இறைவேண்டல் செய்வோம்

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## பிப்ரவரி 2025 — புதிய பணியாளர்கள் பயிற்சி

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 2.02.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி K. ஜஸ்மீன் கபிரியேல், நற்பணி S. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -II தங்கச்சிமடம் புனித குழந்தை தெரசாள் கோவிலில் 08.02.2025 அன்று நடைபெற்றது. 2 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி X லூர்துமேரி, நற்பணி J. ரபேக்கா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -III காளையார்கோவில் தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 9.02.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. சகாயராணி, நற்பணி நற்பணி A. சத்தியேச்திரன், நற்பணி M. லூயிஸ் ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 9.02.2025 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 9.02.2025 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. சகாயமேரி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி A பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 9.02.2025 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -VII அமைதியகம், காயாவயலில் 16.02.2025 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை, நற்பணி Sr. பச்சை ஜோதி, நற்பணி M.மரிய கிரகோரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டம் புதிய பணியாளர்கள் பயிற்சி -VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 16.02.2025 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி K. ஜஸ்மீன் கபிரியேல், நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IX இராசசிங்கமங்களம், தூய ஆவியார் கோவிலில் 23.02.2025 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி S.அந்தோனி பிரகாஷ், நற்பணி S. தைனேஸ்மேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

தஞ்சை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -X திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் 23.02.2025 அன்று நடைபெற்றது. 28 பேர் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியை நற்பணி AR. சூசைராஜ், நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி S. பால்ராஜ், ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## பிப்ரவரி 2025 — கடந்த மாதச் செயல்பாடுகள்

05.02 2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை நடைபெற்றது. 34 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி J. அருள்இளங்கோ, நற்பணி AR.சூசைராஜ், நற்பணி அம்பிகா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

05.02 2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை நடைபெற்றது. 88 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி P.சகாயராணி, நற்பணி V.ரூத் செல்வராணி, நற்பணி A. சித்ரா சிறுமலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

11.02.2025 விரிவாக்க உள்ளுயிர்க் குழு கூட்டம் அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இதில் 60 பேர் கலந்து கொண்டு அணிகள் குறித்த திறனாய்வும் திட்டமிடலும் மேற்கொண்டனர்.

பிப்ரவரி 2025

## வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**செஞ்சை வட்டாரம்**

செஞ்சை வட்டாரத் தியானக் கூட்டம் 02.02.2025 ஞாயிறு அன்று செஞ்சை நற்பணி சேசுராஜ் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு களப்பணிப் பயிற்சித் தியானத்தை நெறிப்படுத்தினார். 29 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானம் குழு செய்முறைப் பயிற்சியுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **ம. விசுவாசம்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டாரத் தியானக் கூட்டம் 16.02.2025 அன்று கானத்தான்காடு, புனிதர்கள் பேதுரு பவுல் கோவிலில் காலை 10 மணிக்கு புகழ்ச்சிவழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி எல். ஆரோக்கியசாமி கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கிறேனா? என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். 25 பணியாளர்கள் கலந்து கொண்டனர். மாலை 4 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி **எஸ் ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**கமுதி வட்டாரம்**

கமுதி வட்டாரத் தியானக் கூட்டம் 16.02.2025 ஞாயிற்றுக்கிழமையன்று கமுதி புனித அந்தோணியார் கோவிலில் வட்டாரப் பணியாளர்களின் இறை வழிபாட்டுடன் காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது. 26 பணியாளர்கள் கலந்து கொண்ட களப்பணிப் பயிற்சி தியானத்தை செயலர் தொடர்பாளராகக் கலந்து கொண்டு நெறிப்படுத்தினார்கள். குழு செய்முறை பயிற்சியுடன் தியானம் மலை 4.30 மணிக்கு நிறைவடைந்தது.

நற்பணி **மைக்கேல்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**காளையார்கோவில் வட்டாரம்**

காளையார்கோவில் வட்டாரத் தியானக் கூட்டம் 09.02.2025 அன்று காலை 10.30 மணிக்கு காளையார்கோவில் புனித அருளானந்தர் கோவிலில் இறைவாழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி சகாயராஜா, ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கிறேனா? என்னும் தலைப்பில் இறைவார்த்தையின் பின்புலத்தில் செய்தி வழங்கினார்கள். 21 பணியாளர்கள் கலந்து கொண்டனர். இறுதி செபத்துடன் கொள்கைப்பாடல் பாடி தியானக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**புதுக்கோட்டை வட்டாரம்**

புதுக்கோட்டை வட்டாரத் தியானக் கூட்டம் 22.02.2025 அன்று சனிக்காலை 10.30 மணிக்கு அரிமளம் புனித கணவின் சூசையப்பர் கோவிலில் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் தொடங்கியது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு நற்செய்தி அறிவிப்பு களப்பணிப் பயிற்சி தியானத்தை வழங்கினார். 19 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி **ஜேம்ஸ் ,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**பரமக்குடி வட்டாரம்**

பரமக்குடி வட்டாரத் தியானக் கூட்டம் 23.02.2025 அன்று காலை 10.30 மணிக்கு உலகநாதபுரம் நற்பணி ஜஸ்டின் திரவியம், நற்பணி செல்வி இவர்களின் இல்லத்தில் வட்டாரக் பணியாளர்களின் தொடக்க செபத்துடன் தொடங்கியது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு நற்செய்தி அறிவிப்பு களப்பணி பயிற்சி தியானத்தை வழங்கினார். 47 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி **ஜஸ்டின் கபிரியேல்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இராமநாதபுரம் வட்டாரம்**

இராமநாதபுரம் வட்டார களப்பணி கூட்டம் நற்பணி வில்லியம், நற்பணி ஜெயந்தி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தொடர்பாளராக G.M.S. ராணி கலந்துகொண்டார்கள். பணியாளர்கள் 34 பேர் கலந்துகொண்டார்கள்.

நற்பணி **ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**சிவகங்கை வட்டாரம்**

சிவகங்கை வட்டார தியானக் கூட்டம் 23-02-2025 ஞாயிறு அன்று, சிவகங்கை மாங்காம்பட்டி கிராமத்தில் நற்பணி M. சகாயமேரி அவரது இல்லத்தில் காலை 10.30 மணி அளவில், நற்பணி ஜோஸ்பின் ஸ்டெல்லா மற்றும் நற்பணி ஆரோக்கிய சாந்தி இவர்களால் புகழ்ச்சி வழிபாடு தொடங்கப்பட்டது. தொடர்பாளராக நற்பணி M. மரியகிரகோரி கலந்து கொண்டு 'நற்செய்தி பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கிறேனா?' என்ற மையச் சிந்தனையில் சிறப்பான செய்தி வழங்கினார். 22 பணியாளர்கள் கலந்து கொண்டனர். பகிர்வுக்குப் பின் கொள்கை பாடலுடன் கூட்டம் நான்கு மணிக்கு நிறைவு பெற்றது.

நற்பணி **எல். ஜோசப் இருதயம்,** வட்டார கண்காணிப்பாளர்.



# சோர்வு

பெரும்பாலும் புதிதாக ஒருசெயலை செய்யும் போது இருக்கும் ஆர்வம் காலம் செல்லச்செல்ல குறைவது இயற்கையே. ஆனால் அந்த செயலில் இருக்கும் ஆர்வமும் அவசியமும் அதை மாற்றிப்போடுகின்றது. நற்செய்தி பணியில் ஈடுபடும் பலர், ஆரம்பத்தில் மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கினாலும், காலப்போக்கில் சோர்ந்துபோகின்றனர். இதற்கு அலகை பயன்படுத்தும் வழிமுளைகள் : உடல் ஒத்துழையாமை, நற்செய்திப் பணியில் ஏற்படும் எதிர்ப்புகள், புதிய முயற்சியில் ஏற்படும் தோல்விகள், உடன் பணிசெய்பவர்களின் ஒத்துழையாமை போன்றவற்றால் மனச்சோர்வு, தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள் போன்றவையாகும். ஆனால், நாம் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். கடவுள் நம்மை ஒருநாளும் தனியாக விடுவதில்லை. 'உலகு உங்களை வெறுக்கிறதென்றால் அது உங்களை வெறுக்கு முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்' (யோவா 15:18) என்று நமக்குக் கூறினாலும் நம்முடைய செயல்களில் உறுதியுடன் இருக்கத் தேவையான ஆற்றலை ஆண்டவர் நமக்குத் தருகிறார். நற்செய்திப் பணியின் பெரிய எதிரி யார்? என்று நினைக்கிறீர்கள். நாம்தான். நாம் எடுக்கும் முடிவை, நாளை செய்வோம் என்கிற எண்ணமே நம்மை கடவுளின் ஆசீர்வாதத்தை பெற தடுக்கிறது. அது நாம் களப்பணி செல்வதைக்கூட தடுக்கும் என்றால் மற்ற காலங்களில் சொல்ல வேண்டியதில்லை.

பலர் நாம் என்னதான் கடவுளைப் பின்பற்றினாலும் நமக்கு பிரச்சனை வருகின்றது என்று வருத்தப்பட்டு சோர்வடைகின்றனர். 'நன்மை செய்வதில்

மனம் தளராதிருப்போம் நாம் தளர்ச்சி அடையாதிருந்தால் தக்க காலத்தில் அறுவடை செய்வோம்' (கலா 6:9). இந்த வார்த்தைகளையே நமது முன்னோடிகளும் பின்பற்றி உறுதியுடன் இருந்தனர் இதேபோல நாமும் உறுதியுடன் இருக்க வேண்டும்.

நோவா ஆண்டவரின் கட்டளைப்படி கப்பலைக் கட்டி, பல வருடங்கள் மக்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளானாலும், அவர் கடைசி வரை தனது வாழ்வில் சோர்ந்து போகவில்லை. மோசே அவர்தம் மக்களை விடுவிக்கும் போது பல தடைகளை சந்தித்தார். ஆனால், ஆண்டவர் அவரை வழிநடத்தினார் அவர் சோர்ந்துபோகவில்லை. கடவுள் பணிசெய்யும்போது யோனாவுக்கு ஆமணக்கு செடியால் தலைக்கு நிழல் தந்து மனச்சோர்வை போக்கியது போல (யோனா 4:6) நம்முடைய சோர்வையும் போக்குவார்.

'நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம்' (2 கொரி 5:7) என்ற விவிலிய வார்த்தைகள் நம்மை உறுதியாக வைத்திருக்க உதவும். நாம் சோர்ந்து போகாதிருக்க வேண்டும்.

சிலர் தாங்கள் பெரும் பாவம் செய்துவிட்டோம், நாம் இதற்கு தகுதியில்லை என்று குற்றப் பழிவுணர்வு கொள்கின்றனர். ஆண்டவருக்கு நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய காரியமும் அவருக்குப் பெருமை சேர்க்கிறது.

பவுல் சொல்வது போல, 'எந்தசுமையையும் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித்தள்ளிவிட்டு நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மனஉறுதியோடு ஓடுவோம்' (எபி 12:1). மேலும் 'பாவிகளால் நமக்கு உண்டான எந்த எதிர்ப்பையும் மன உறுதியோடு தாங்கிக்கொண்ட அவரை எண்ணிப்பாருங்கள் அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போக மாட்டீர்கள் ' (எபி 12:3). பல மக்கள் ஆயனில்லா ஆடுகளாய் திரிவதை நாம் காணலாம், அவர்களை மீட்டெடுப்பது நமது கடமை (மத் 28:19-20). ஆண்டவரில் நம்பிக்கைவைத்து புதிய ஆற்றல் பெறுவோம், நாம் களைப்படையவும் மாட்டோம் சோர்வடையவும் மாட்டோம் (எசா 40:31). கடவுள் ஒவ்வொருவருக்கும் தனித்தன்மையான வரங்களை வழங்கியிருக்கிறார். அவற்றைப் பயன்படுத்தி பணி செய்வோம்.

நற்செய்திப் பணி என்பது கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு உயரிய பொறுப்பு. சில நேரங்களில் சோர்வடையலாம், ஆனால் கடவுள் நம்மோடு இருக்கிறார், எனவே நாம் அஞ்சவும் திகைக்கவும் வேண்டாம். சோர்வின் காரணங்களை உணர்ந்து, விவிலிய வார்த்தையால் உற்சாகம் பெறுவோம். அவர் நம்மையும் ஒரு கருவியாக பயன்படுத்த அர்ப்பணிப்போம், நம்முடைய தாலந்தை புதைக்க முயற்சிக்க வேண்டாம், மீட்பை பெற்றுத்தர முயற்சிப்போம், எனக்கு வலுவூட்டுகின்றவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு (பிலி 4:13). என்று உரக்க கூறுவோம்.

நமக்கு வழங்கப்பட்ட பணியில் சோர்வடையாமல் ஓட்டம் தொடர்வோம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்

அதற்கு அவர் ஆண்டவரே நீர் யார் என்று கேட்டார் (திப 9:5). புனித பவுலின் மனமாற்றம் மீட்பின் வரலாற்றில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. நம் ஆண்டவர் உயிர்த்தெழுதலுக்குப்பின் அவரது சிலுவையைப் பற்றிய செய்தி அதிவேகமாகப் பரவியது. ஆண்டவரின் உடலைத் தேடிக் கல்லறைக்குச் சென்ற பெண்களுக்குக் கிடைத்த முதல் செய்தி. உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன்? (லூக் 24:5). பின்பு எம்மாவுஸ் செல்லும் வழியில் சீடர் இருவருக்கு உயிர்த்த ஆண்டவர் தோன்றி நீங்கள் வழிநெடுகிலும் யாரைப் பற்றிப் பேசிக் கொண்டு வருகிறீர்கள் என்றார். பின்பு அவர்களுக்கு மறைநூலை விளக்கிக் கூறும்போது அவர்கள் உள்ளம் பற்றியெறிந்தது (லூக்24:13-32). ஒரு பெண்ணிடம் ஆண்டவரை மறுதலித்துப் பேசிய பேதுரு உயிர்தெழுதலுக்கு பின் கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள் என்று வெளிப்படையாகப் பறை சாற்றினார். ஆண்டவர் உயிர்த்தெழுந்த இந்த உண்மைச் செய்தியைக் கேட்ட மக்கள் உள்ளம் குத்தப்பட்டு ஆண்டவர் பக்கம் திரும்பினர் (திப 2:32-41). உயிர்த்த ஆண்டவரின் பெயரால் பல வல்ல செயல்கள் நடைபெற்றன. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒரு மனிதரை நாசரேத்து இயேசுவின் பெயரால் குணமாக்கியதைக் கண்ட மக்கள் மிகவும் வியப்படைந்தார்கள் (திப 3:1-10). முதலில் மூவாயிரம் பின்பு ஐயாயிரம், அதன் பின்பு எண்ணிடலங்கா மக்கள் ஆண்டவர் பக்கம் திரும்பினார்கள். இவற்றைக் கேள்விப்பட்ட குருக்களும், சதுசேயர்களும் கோவில் காவல் தலைவர்களும் எரிச்சலடைந்தார்கள் (திப 4:1-2). ஏன் அவர்கள் எரிச்சல் அடைந்தார்கள்? இதுபோல் இரண்டு முறை இதற்கு முன்பு மக்களிடையே கிளர்ச்சி ஏற்பட்டு கிளர்ச்சி உண்டாக்கிய இயக்கம் ஒன்றுமில்லாமல் போயிற்று. இந்த அமைப்பும் அது போன்றதுதான் என எண்ணினார்கள் (திப 5:34-38). இரண்டாவதாக ஆண்டவரை அடக்கம் செய்த கல்லறையைக் காவல் செய்த படைவீரர்கள் அவர் உயிர்த்தெழுந்தவுடன் நகரத்திற்குச் சென்று தலைமை குருக்களுக்கு செய்தியை அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் ஆலோசித்து உயிர்த்தெழுந்த செய்தியைச் சொன்ன படைவீரருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து நாங்கள் தூங்கி கொண்டிருந்தபோது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர் என்று சொல்லுங்கள். ஆளுநரை நாங்கள் நம்ப வைத்து உங்களுக்கு எந்தத் தொல்லையும் வராதவாறு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கூற அவர்களும் பணத்தை வாங்கிக் கொண்டு தங்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே செய்தார்கள். இந்நாள் வரையில் இந்த வதந்தி யூதரிடையே பரவியிருக்கிறது (மத் 28:11-15). எனவேதான் யூதர்களில் பலர் இன்னும் மெசியா வரவில்லையென்று வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். புனித பவுலும் முதலில் இந்நிலையில்தான் இருந்தார். கிறிஸ்தவத்தை முதலில் அது ஒரு புதிய நெறி என்று அழைத்தார் (திப 9:2). இந்த அமைப்பு யூதர்களின் திருச்சட்டத்திற்கு எதிரானதாக எண்ணினார். எனவேதான் இந்த புதிய நெறியைச் சார்ந்த யாராக இருந்தாலும் அவர்களைக் கைது செய்து எருசலேமுக்கு இழுத்துக் கொண்டு வர தமஸ்கு நகரிலுள்ள தொழுகைக் கூடங்களுக்கு கடிதங்களை வாங்கி கொண்டு சீறியெழுந்து ஒரு கொலைவெறியரைப் போல ஓடினார் (திப 9:1-2). யூதத் தலைவர்கள் இலஞ்சம் கொடுத்து பரப்பிய பொய்யான செய்தியை அதாவது

ஆண்டவர் உயிர்த்தெழவில்லை என்ற செய்தியை நம்பாவிட்டாலும் அவர் திருச்சட்டம் அதிகம் படித்தவரானதால்அவர் மறைமுகமாக எதையும் செய்ய விரும்பாமல் அந்த நெறியைச் சார்ந்தவர்களை கைது செய்ய ஆளுநரிடம் கடிதங்களைக் கேட்டு வாங்கினார்.

கடிதம் என்பது இன்று உள்ள நீதிமன்ற உத்தரவு அது இல்லாமல் யாரையும் எளிதில் கைது செய்ய இயலாது. பவுல் சட்டப்படி வெளிப்படையாக செயல்பட்டார். இவ்வாறு அவர் தமஸ்குவை நெருங்கியபோது திருச்சட்டத்தில் அவருக்கு இருந்த ஆர்வத்தைக் கண்ட ஆண்டவர் விண்ணக ஒளியை அவர் மீது வீசச் செய்தார். அந்த ஒளியைக் காணமுடியாமல் அவர் தரையில் விழ சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்? என்ற ஆண்டவரின் குரலொலியை அவர் கேட்டார். அதற்கு அவர் ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டார். ஆண்டவர் நீ துன்புறுத்தும் இயேசு நானே என்றார் (திப 9:6). இந்த ஒரு வார்த்தைதான் பவுலின் வாழ்க்கையை தலைகீழாக மாற்றியது. இறந்துபோன ஒரு மனிதனால் எப்படி மற்றவர் தன்னைத் துன்புறுத்துவதை உணரமுடியும். இவர் ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய் என்று கேட்கிறாரே? நான் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினேன் அவர்களைத் துன்புறுத்துவது இவரைத் துன்புறுத்துவதாகக் கூறுகிறாரே என்று அந்த நொடிப் பொழுதே ஆண்டவர் உயிரோடு இருக்கிறார். அவர் உயிர்த்தெழுந்தது உண்மைதான் என்று தன் உள்ளத்தில் உறுதியாக நம்ப ஆரம்பித்துவிட்டாார். அவர் நம்பியது மட்டுமல்ல முன்பு யாரோடு சேர்ந்து அதை அழிக்க முயன்றாரோ அவர்கள் அனைவரும் இந்த உண்மையை அறிய வேண்டும் என்ற ஆவல் அவரைத் தட்டி எழுப்பியது. தாவீதின் மரபில் வந்த இயேசு கிறிஸ்து இறந்து உயிர் பெற்று எழுந்தார் என்பதே என் நற்செய்தி என்றார் (2 திமொ 2:8). இந்தப் பவுல் உயிர்த்த நம் ஆண்டவரை அறிவதற்கு முன் சவுலாக இருந்தார். அப்பொழுது அவருக்குள் இருந்த பெருமை நான் பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் பெற்றவன்: இஸ்ரயேல் இனத்தவன்: பென்யமின் குலத்தவன்: எபிரேய பெற்றோருக்குப் பிறந்த எபிரேயன்: திருச்சட்டத்தைக் கடைபிடிப்பதில் பரிசேயன்: திருச்சட்டத்தை கடைபிடிப்பதில் எனக்கிருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தினேன்: திருச்சட்டத்தின் அடிப்படையிலான நீதிநெறியைப் பொருத்தமட்டில் குற்றமவற்றவனாக இருந்தேன் என்று பட்டியல் போட்டு இத்தனை பெருமைகளும் அவருக்குள் இருந்தன என எடுத்துக் கூறுகிறார் (பிலி 3:5). ஆனால் பவுலாக மாறியபோது எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தையெனக் குறிப்பிடுகிறார் (1 கொ 15:8). பாவிகளுள் முதன்மையான பாவி நான் என்றார் (1 திமொ 1:15). இந்தப் பவுலின் மனமாற்றம் கிறிஸ்தவத்தை மீண்டும் யூத மதமாக மாற்ற முயன்ற மதத் தலைவர்களிடமிருந்து காப்பபாற்றியது மட்டுமல்ல அந்த யூதர்களில் பலர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் காரணமாக இருந்தது. எனவேதான் சகோதர சகோதரிகளே எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின என்கிறார் (பிலி 1:12). எனவே இன்நாட்களில் பணியாளர் ஆவதற்குமுன் எப்படியிருந்தேன்? பணியாளர் ஆன பின்பு எனது மனமாற்றம் பிறருக்கு நற்செய்தியைச் சொல்வதற்கு ஏதுவாக உள்ளதா என்பதை நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



உம்மோடு இணைக்கப்பெற்று, தூய்மையோடு இறைமக்களாக இருக்கவும், கனி வாழ்வு வாழ்ந்திடவும் அழைத்தவரே, இறைவா! இந்தத் தவக்காலத்தில் நாங்கள் எடுக்கும் தவ முயற்சிகளும், களப்பணி மற்றும் இல்ல சந்திப்புப் பணிகள் அனைத்து மற்றவர்களை மாற்ற அல்ல, நான் மனமாற என்பதை உணர்ந்து அன்புப் பசியால் ஏங்குபவர்களுக்கு அன்பைத்தரவும், சாட்சியாக வாழ்ந்ததை அறிவிக்கவும் வேண்டிய மன நிலை தர வேண்டுமென்று, உம்மை மன்றாடுகிறேன்.

## இது சாத்தியமா ?

கலாவும், மாலாவும் நெருங்கிய தோழிகள் என்றாலும் இருவருக்குமிடையே அடிக்கடி வாக்குவாதம் வருவதுண்டு. அது சற்று வலுவடைந்து சண்டையாக மாறுவதுமுண்டு. ஆசிரியை மேரி அன்றைய தினம் சற்று தாமதமாக வகுப்புக்குள் நுழையும் முன் ஒரே சலசலப்பு. நீயா நானா என்ற வாய்மொழி போர் உச்சத்திற்குப் போயிருந்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட மேரி ஆசிரியை சற்று நிதானமாக கலாவையும், மாலாவையும் அருகில் வரவழைத்து விசாரணையைத் தொடங்கினார். கலா, 'டீச்சர், நான் மாலாவை எவ்வளவு நேசிக்கிறேன்னு உங்களுக்கே தெரியும். ஆனா இந்த புள்ள டீச்சர், மத்த பிள்ளைங்க என்னைய கேலி பண்றப்ப இவ எனக்கு ஆதரவா இல்லாம மத்த பிள்ளைகளோட சேர்ந்து என்னைய கேலி பண்றா டீச்சர். மாலா இடைமறித்தாள். இவள் என்னை பற்றி ரிப்போர்ட் பண்ற அளவுக்கு இவ ஒன்னும் யோக்கியம் இல்ல டீச்சர். முந்தாநாள் சரண்யாவும், லட்சுமியும் என்னைய கேலி பண்ணப்ப இவ மட்டும் சும்மா இருந்ததாளான்னு கேளுங்க டீச்சர். இவளுக்கு வந்தா மட்டும் ரத்தம், எனக்கு வந்தா தக்காளி சட்னியா? இவளுக்கு ஒரு நியாயம், எனக்கு ஒரு நியாயமா? நீங்களே சொல்லுங்க டீச்சர்'. கதை இந்த இடத்தோடு நிறுத்தப் படுகிறது. இச்சிறு பிள்ளைகளின் மனநிலையை ஆராய்கிறபோது லூக்கா ஆறாம் அதிகாரத்தில் ஏதேனும் வசனம் ஞாபகத்திற்கு வருகிறதா?

ஆம் 31ஆம் வசனம் தான் அது. 'பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் பிறருக்கு செய்யுங்கள்'. மனவியலார் சிக்மண்ட் பிராய்ட் என்பவரது கொள்கை திரட்டு: 'அறிந்து கொள்வது தான் முக்கியம்.

அறிந்துகொள்ளப்படுவதல்ல 'இந்த இறை வார்த்தையோடு ஒத்துப் போவதை உணர்ந்து கொள்வோம். சமூகத்திலோ குடும்பத்திலோ பிறரிடம் நல்லுறவை வளர்ப்பது எப்போது சாத்தியமாகும்? லூக்6:31ஐ வாழ்வாக்கப்படும்போது, சாத்தியமாகுமே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

# நல்ல பெண் (VIRTUOUS WOMAN)

சாலமோன் ஞானி தன் வாழ்நாட்களில் திறமை வாய்ந்த மனத்திடமுள்ள ஒரு நல்ல பெண்ணைத் தேடுகிறார். தன்னுடைய இனத்தாரிலும், பிற இனப் பெண்களிலும், பலநாட்டுப் பெண்களிலும் எழுநூறு அரசகுலப் பெண்களை மனைவியராகவும் முந்நூறு பெண்களை வைப்பாட்டியர்களாகவும் தேர்ந்துகொண்டு தேடியும் கண்டு கொள்ள முடியவில்லை. ஆகவே, தான் எழுதிய கடைசி நூலில் 'மனிதன் எனத் தக்கவன் ஆயிரத்தில் ஒருவனே என்று கண்டேன். பெண் எனத் தக்கவள் யாரையுமே நான் கண்டதில்லை (சஉ 7:28) என்கிறார். ஆயிரம் பெண்களை மனைவியர்களாக கொண்டவர், பெண் எனத் தக்கவள் யாரையுமே நான் கண்டதில்லை என்றால் பெண் என தக்கவள் யார்? பெண்ணிடம் எதை எதிர்பார்க்கிறார். அவரின் தேடுதலுக்கான காரணம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

> பவளத்தைவிடப் பெருமதிப்புள்ளவள்
> (நீமொ 31:10)

நீதிமொழிகள் நூலில் 31 அதிகாரத்தில், சாலமோனின் தாய் அவரிடம், என் வேண்டுதலின் பயனாய்க் கிடைத்த என் பிள்ளாய், நான் சொல்வதைக் கவனி. உன் வீரியத்தையெல்லாம் பெண்களிடம் செலவழித்து விடாதே; அரசருக்கு குடிப்பழக்கம் இருத்தலாகாது : பேசத் தெரியாதவர் சார்பாகப் பேசி எளியோருக்கும் வறியோருக்கும் நீதி வழங்கு, என்று கூறியதோடு, திறமை வாய்ந்த மனதிடமுள்ள மனையாளைக் காண்பது மிக மிக அரிது; அவள் பவளத்தைவிட பெருமதிப்புள்ளவள் என்றும் அவளின் நற்குணங்கள் எப்படிப்பட்டது என்பதையும் பட்டியலிடுகிறார்.

1. அவள் வைகறையில் துயிலெழுவாள் வீட்டாருக்கு உணவு சமைப்பாள்; வேலைக்காரிகளுக்குரிய வேலைகளைக் குறிப்பாள் (15)
2. பட்டாடைகளையும் கச்சைகளையும் நெய்து வணிகரிடம் விற்பனை செய்வாள் (24)
3. நிலத்தை வாங்கும்போது தீர விசாரிப்பாள், தன் ஊதியத்தைக் கொண்டு அதில் தோட்டம் அமைப்பாள் (16).
4. தன் உழைப்பு நற்பலன் தருமென்பது அவளுக்குத் தெரியும், ஆகவே, நாள் முழுதும் ஊக்கம் குன்றாது சுறுசுறுப்புடன் வேலை செய்வாள். அவள் ஏற்றி வைத்த விளக்கு ஒருபோதும் அணையாது (17, 18).
5. தன் இல்லத்தின் அலுவல்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பாள், உணவுக்காகப் பிறர் கையை எதிர்பார்த்துச் சோம்பியிருக்கமாட்டாள் (27).
6. அவள் ஆற்றலையும் பெருமையையும் அணிகலனாகப் பூண்டவள் வருங்காலத்தைக் கவலை இன்றி எதிர்நோக்கியிருப்பாள் (25).
7. அவளை ஒரு வணிகக் கப்பலுக்கு ஒப்பிடலாம். அவள் உணவுப் பொருள்களைத் தொலைவிலிருந்து வாங்கி வருவாள்(14).
8. எளியவனுக்கு உதவி செய்து, வறியவனுக்கு வயிறார உணவளிப்பாள் (20).
9. அவள் பேசும்போது ஞானத்தோடு பேசி, அன்போடு அறிவுரை கூறுவாள் (26).
10. தனக்கும் தன் வீட்டருக்கும் வேண்டிய உடைகளை தானே நெய்வாள், அவள் உடுத்துவது பட்டாடையும் பலவண்ண உடைகளுமே (21,22).

11. அவளுடைய பிள்ளைகள் அவளை நற்பேறுபெற்றவள் என்று பாராட்டுவார்கள். அவளுடைய கணவன் அவளைப் புகழ்வான் (28)

12. தன் வாழ்நாள் முழுவதும் கணவனுக்கு நல்லதையே செய்வாள், ஒரு நாளும் தீங்கு நினையாள் (12).

13. அவளை மணந்த கணவன் ஊர் பெரியோருள் ஒருவனாய் இருப்பான், மக்கள் மன்றத்தில் புகழ் பெற்றவனாயுமிருப்பான் (23).

14. திறமை வாய்ந்த பெண்களிலும் சிறந்தவள் நீயே! என்று கணவன் சொல்வான் அவளால் அவனுக்கு நலமும் வளமும் பெருகும் (11.29).

15. அவளின் எழிலையும் அழகையும் விட அவள் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே எல்லா புகழுக்கும் காரணமாய் இருக்கும் (30).

16. அவளின் நற்செயல்களின் நற்பலனை எண்ணி மக்கள் மன்றம் பாராட்டும் வாழ்த்தும் (31).

இவ்வாறு தாய் சொன்ன அறிவுரையை (நீமொ 31:1-31) சாலமோன் சவாலாகக் கொண்டு திறமைவாய்ந்த பெண்ணை எல்லா இனத்தாரிலும் பலநாட்டு பெண்களிலும் தேடுகிறார். ஏனென்றால், பிற இனத்தைச் சேர்ந்த "ரூத்' என்ற மோவாபிய பெண் நல்லவள் (ரூத்3:11) என்று திருவிவிலியம் கூறுகிறது. ஆகவே பிறஇனப் பெண்களான எகிப்து பார்வோனின் மகள் (1அர 3:1, 7:8) அம்மோனிய நாட்டுப் பெண் (1அர 14:21) மோவாபியர், ஏதோமியர், சீதோனியர், இத்தியர் (1அர11:1) ஆகிய பல நாட்டுப் பெண்களையும் மணந்து தேடினார். சாலமோனுக்கு எழுநூறு அரசகுலப் பெண்கள் மனைவியராகவும், முந்நூறு பெண்கள் வைப்பாட்டிகளாகவும் இருந்தார்கள். அப்பெண்கள் அவரது இதயத்தை தவறான வழியில் திருப்பிவிட்டார்கள் (1அர11:3). ஆகையால், 'நான் ஒன்றன் பின் ஒன்றாய் ஆராய்ந்து பார்த்தேன் சாவைவிடக் கசப்பான தொன்றைக் கண்டேன் அதுதான் பெண்' (சஉ7:26, 27) என்கிறார்.

திறமை வாய்ந்த பெண்களில் சிறந்தவள்
(நீமொ 31:29)

சாலமோன் அளவற்ற ஞானமும், யாரும் பெறமுடியாத செல்வமும், எவரும் எட்ட முடியாத புகழையும் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்டவர் (1அர3:12-,13, 10:11-23, சஉ1:16-17). சூரியனுக்குக் கீழ் கண்கள் கண்ட அனைத்தையும் அனுபவித்து மகிழ்ந்தவர். சூரியனுக்கு அப்பாலும் இறைவனின் செயல்பாடுகள் இருக்கின்றன. ஆகையால் எல்லாவற்றையும் மனிதன் ஆராய்ந்து அறிந்துவிட முடியாது. அனைத்தையும் அறிந்தவர் கடவுளே! மனிதனின் வாழ்வு வெங்காயத்தைப் போன்றது. அது எப்போதும் வெற்றிடமாகவே உள்ளது. அதனை நிரப்ப வேண்டியவர் நிரப்பும்போது மட்டுமே விலையேறப்பெற்றதாய் மாறும் என்கிறார். ஆகையால், நான் செய்த செயல்கள் யாவும், அவற்றை செய்வதற்கு நான் எடுத்த முயற்ச்சிகள் அனைத்தும் வீண் என்பதைக் கண்டேன். ஆகவே, அனைத்தும் காற்றை பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும். முற்றும் பயனற்ற செயல்களே (சஉ 2:11) என்கிறார். ஆக மனித வாழ்வின் பொருளைச் சொல்ல எந்த அறிவியலாலும் இயலாது (சஉ 1:4-11) எப்படிப்பட்ட தந்துவங்களாலும் முடியாது (சஉ 1:12-18, 3:11) என்கிறார். ஆகவே மண்ணிலிருந்து வந்த உடல் மண்ணுக்கே திரும்பு முன்னும், கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பு முன்னும் உன்னைப் படைத்தவரை உள்ளத்தில் நினை (ச உ 12:7) என்கிறார்.

பழைய ஏற்பாட்டில் சாலமோன் ஞானியால் நல்ல மனையாளைக் கண்டு கொள்ள முடியவில்லை. புதிய ஏற்பாட்டில் ஞானிகளுக்கெல்லாம் ஞானி சாலமோனைவிடப்

பெரியவராகிய இயேசு கிறிஸ்து நல்ல மனையாளைக் கண்டு கொள்வாரா? சாலமோன் ஞானி இயேசுகிறிஸ்துவின் நிழலாக (திபா72) காணப்பட்டார். சாலமோன் தாவீதின் மகன் (நீ மொ 1:1) இயேசுவும் தாவீதின் மகன் என அழைக்கப்பட்டார் (மத் 1:1) சாலமோன் தந்தையின் அரியணையில் ஆட்சி செய்தார் (1அர 3:7) இயேசுவும் தந்தையின் அரியணையில் வீற்றிருப்பார் (திவெ 3:21) சாலமோன் சிறந்த ஞானி (2 குறி 9:3, 1அர 3:12) இயேசு கிறிஸ்து சாலமோனைவிடப் பெரியவர் (மத் 12:42) சாலமோன் தன் தாயின் விருப்பத்தின்படி நல்ல மனையாளைத் தேடினார் (நீ மொ 31:10). தாயும் தந்தையுமானவரின் திருவளப்படி இயேசு கிறிஸ்துவும் எல்லோரையும் தேடி மீட்டுக்கொள்ள விரும்புகிறார் ( யோவா 10:16, 1திமோ 2:4). ஏனெனில் நமக்காக உயிரையே கொடுத்தார் அவர்.

ஞானிகளுக்கெல்லாம் ஞானி சாலமோனைவிடப் பெரியவர் ஆயிரத்தில் ஒருவராக விளங்கும் (சஉ 7:28) இயேசு கிறிஸ்து மீண்டும் மகிமையோடு வரும்போது நல்ல மனையாளைக் கண்டு கொள்வார். நல்ல மனையாளுக்கு திருஅவை ஒப்பிடப்படுகிறது (எபே 5 அதிகாரம்) இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. ஏனென்றால் இயேசு நம்மை அன்பு செய்கிறார். நம்மை நம்புகிறார். ஏனெனில் அன்பு அனைத்தையும் நம்பும், அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் (1 கொரி 13 அதி). ஆகவேதான் தன் பணியைப் பவுலிடம் ஒப்படைக்கிறார். இதுபற்றி தூய பவுல் 'நான் நம்பிக்கைகுரியவன் என்று கருதி அவர் என்னைத் நம் திருத்தொண்டில் அமர்த்தினார் (1திமொ 1:12) என்கிறார். ஆகவே, நாம் இயேசுகிறிஸ்துவோடு இணைந்திருக்க வேண்டும். அவரை விட்டு பிரிந்து நம்மால் எதுவும் செய்யமுடியாது. அவரோடு இணைந்திருந்தால் மிகுந்த கனி தரும்படி மாற்றுவார் (யோவா 15:5). நம் வாழ்வு இயேசு கிறிஸ்துவில் மறைந்திருக்கிறது (கொலோ 3:4, 1யோவா 5:20). இறைவன் இல்லாத வாழ்வு வீண். ஆகவே படைத்தவரை மறவாதே (சஉ 12:1). இயேசுகிறிஸ்து மீண்டும் வரும்போது நல்ல மனையாளாகக் கண்டு தமது மகிமையில் சேர்த்துக்கொள்ளும் நம்பிக்கைக்குரிய நற்குணமுள்ளவனாய் இருந்து திருஅவையை நல்ல மனையாளாக்குவோம்!.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**



## தனித்திரு ! செபித்திரு !

இயேசு மக்களை அனுப்பிவிட்டு அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின் மேல் ஏறினார். பொழுதுசாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியே இருந்தார் (மத்தேயு : 14:23)

சீடர்களாகிய நாமும் தனித்திருந்து செபிக்க அழைக்கப்படுகிறோம். ஆனால் முடியவில்லையே ஏன்?

பாலைவன புனித அந்தோணியார் எகிப்து நாட்டில் துறவியாக வாழ்ந்தார். இவர் செபம் செய்வதற்காக சீனாய் வனாந்திரத்திற்கு தனித்து செல்வது வழக்கம். பலமணி நேரம் தனித்திருந்து செபிப்பது மிகவும் பிடித்த செயல் ஆகும். இறை இயேசுவை தனித்திருந்து செபித்து சுவைத்த நல்ல துறவி விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் உறுதியாக இருந்து தன்னுடைய பணிவாழ்வை மகிழ்ச்சியோடு ஆவியானவரின் துணையோடு வாழ்ந்தவர். இவர் அலெக்ஸாண்டிரியா பட்டணத்திலிருந்து குதிரையில் சீனாய் வனாந்தரத்திற்கு செல்வார்.

இவர் இப்படி அடிக்கடி குதிரையில் பயணிப்பதை வாலிபர் ஒருவர் கண்டு வழிமறித்தான். துறவியிடம் ''நீங்கள் அடிக்கடி குதிரையில் பயணிக்கிறீர்களே எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டான். ''சீனாய் வனாந்திரத்து குகை ஒன்றில் அமர்ந்து செபிக்கப் போகிறேன்'' என்றார்..

''ஏன் இங்கே இருந்து செபிக்க முடியாதா? என்றான் வாலிபன்.

''மனதை ஒருநிலைப்படுத்தி இயேசுவை தவிர வேறு நினைவின்றி செபிக்க தனிமையான இடம் வேண்டும்'' என்றார் துறவி. கவனம் சிதறாமல் நான் இங்கிருந்தே செபிப்பேனே என்றான் வாலிபன். அப்படியா மகிழ்ச்சி என்றார் அந்தோனியார்.

இங்கேயே நான் கவனம் பிசகாமல் செபித்து காண்பிக்கவா? என்றான் அப்படி நான் செபித்து விட்டால் எனக்கு என்ன தருவீர்கள் என்று அந்தோணியாரை கேட்ட வாலிபனுக்கு உனக்கு என்ன வேண்டும்? என்றார் கேட்டார். நீங்கள் பயணிக்கிறீர்களே இந்த குதிரையை எனக்கு தந்துவிட வேண்டும் என்றான் வாலிபன். சரி என்று ஒப்புக்கொண்டார். மிகுந்த மகிழ்ச்சியோடு மீனவ வாலிபன் செபம் செய்ய தொடங்கினான். கண்களை மூடி.

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது என போற்றப்பெறுக.
உமது ஆட்சி வருக உமது திருவுளம் விண்ணுலகில்
நிறைவேறுவது போால, மண்ணுலகிலும நிறைவேறுக.

என்று சொல்லி கொண்டிருந்தவன். கண்ணை திறந்து பார்த்தான். செபம் சொல்லுவதை நிறுத்தினான். அவனது வாய் செபத்தில் கண் மூடி லயித்திருந்த புனிதரின் செபமும் தடைப்பட்டது. கண்களை திறந்தார். வாலிபன் புனிதரை ஏறெடுத்து நோக்கி. சுவாமி குதிரையோடு சேர்த்து குதிரைமேல் போட்டிருக்கும் சேணத்தையும் தர வேண்டும் என்றான். புனிதர் மென்மையாக புன்னகைத்தார். வாலிபன் தன் செபம் கவன சிதறலால் தடைப்பட்டதை உணர்ந்தான். நாணமடைந்தான்.

நாமும் இவ்வாறுதான் அறைக்குள் நுழைந்து செபத்தில் இருக்கும்போது பல்வேறு வகையான கவனத் திதறல்களுக்கு இடம் தருகிறோம்.

நாம் செபிக்கும்போது கண்களையும் காதுகளையும் மூடி. அலைபேசியயை ஒதுங்க வைத்துவிட்டு செபிக்க வேண்டும். அதைத்தான் இயேசு இதைத்தான் நாம் உள் அறைக்கு சென்று தாளிட்டு செபிக்க வேண்டும் என்கிறார். அப்படி செபித்து தனித்திருப்போம்.

நற்பணி V.செபஸ்டியன் தார்சீஸ். செஞ்சை

## பாடுகளில் பங்கேற்கும் எதிர்நோக்கு
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)



அந்த ஆறு, கற்கள், பாறைகள், பள்ளங்கள் , மேடுகள் என்று வளைந்து நெளிந்து நுரை பொங்க, உற்சாகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. வந்து கொண்டிருந்த ஆறு அங்கே எல்லை காண இயலா பெருங்கடலைப்பார்த்து ஸ்தம்பித்து நின்றது.

இன்னும் கொஞ்சம் ஓடினால் இந்தக் கடலில் கலந்து விடுவோமே. இதில் கலந்து விட்டால் நாம் காணாமல் போய்விடுவோமே! ஆறு என்ற என் பெயர் தெரியாது போய்விடுமே என்று பிரமித்து நின்றது. அதன் நினைவை அறிந்த அக்கடல் 'என்னிடத்தில் வா. என்னோடு கலந்து மறைந்து விடு. அப்போது உன் பெயர் ஆறு அல்ல. கடல் என்றாகிவிடும்' என்று கூற ஆறு பரந்து விரிந்த அக்கடலில் உற்சாகமாக ஓடிக் கலந்து கடலோடு கடலாகியது.

ஆம் பாடுகள் பலரையும் வாழ்வில தேக்கத்தை தந்து அடுத்த தெய்வீக நிலைக்குச் செல்வதைத் தடுத்து விடுகிறது. பலருக்கோ பாடுகள் நம்மை தெய்வீகத்தை நோக்கி அழைத்துச் செல்லவே என்ற எதிர்நோக்கை அளித்து பாடுகளைக் கடந்து பரமன் பதம் சேர்க்கின்றது. பாடுகள் வழிதான் மகிமை என்ற மறைபொருளை அறிந்து கொண்டால் அந்த எதிர்நோக்கு கடவுளோடு இணைந்த உயர்நிலையை நம்மை அடைய வைக்கும்.

இயேசுவின் சிலுவைப்பாடுகளின் பாதைகளை தியானிக்கவும், இயேசுவின் மரணம், உயிர்ப்பைப் பற்றி தியானித்து எவற்றில் நாம் தொய்வுற்று இன்னும் கடவுளோடு வாழ்வை இணைக்காமல இருக்கிறோம் என்பதை உள்முகப் பார்வையோடு ஆய்ந்தறியவும் திரு அவையால் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த தவக்கால நாட்களில் சிந்திப்போம்.

**பாடுகளில் பங்கேற்பு:**

துன்ப துயரங்கள், வேதனை விரக்திகள், தலை குனிவுகள், அவமான உணர்வுகள், இழப்புகள், தோல்விகள் என்று மனிதர்கள் தினம் தினம் சந்திக்கும் பாடுகள்தான் எத்தனை எத்தனை? பலரும் இதில் கரைந்து காணாமல் போய்விட சிலர் மட்டுமே துன்பங்களைப் பயன்படுத்துகின்றனர். துன்பத்தில் இன்னும் அதிகமாய் கடவுளின் நெருக்கத்தைப் பெறுகின்றனர். இயேசுவின் பாடுகளோடு தமது பாடுகளை ஒப்புக் கொடுத்து, தமது அவமானங்களை அவரது அவமானங்களோடு ஒன்றித்து, தனது கண்ணீரை அவரது கண்ணீரோடு கரைத்துக் கொண்டு... இயேசுவை ஆதாயமாக்கிக்

கொள்கின்றனர். இயேசுவோடு இயேசுவாக தம்மை இணைத்துக் கொள்கிறனர் அவர் தரும் மீட்பின் மகிழ்வை தமதாக்கிக் கொள்கின்றனர். 'தமக்கு நேர்ந்தவைகளை எல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவான' (பிலி 1:12) கூரான ஆயுதங்களாய் பயன்படுத்தி இறை விருப்பத்தை அவர் துணையோடு நிறைவேற்றுகின்றனர்.

'உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்' (யோவா 17:33) என்று சீடர்களிடம் கூறினார்.

சீடத்துவ வாழ்வில் தூய ஆவியானவரின் அருள்பொழிவு பெற்ற பின் சீடர்களின் வாழ்வு இயேசுவின் வாழ்வாக மாறியது. அவரின் குணநலன்கள் சீடர்களில் வெளிப்பட்டது. அவரின் இரக்கச் செயல்கள் சீடர்களின் இரக்கமாய், அரும் அடையாளமாக வெளிப்பட்டது. துன்பங்கள் மூலம் இயேசுவை நெருங்கி நெருங்கி வந்தனர். இயேசுவாக சிந்தித்தனர், இயேசுவாக செயல்பட்டனர், இயேசுவைப் போலவே நற்செய்தியை அதிகாரமாக, வல்லமையாக அறிவித்தனர். அவரைப் போலவே பாடுகளை ஏற்றுக் கொண்டு உயிர் துறந்தனர். ஆண்டவரின் மாட்சிமையின் பேரொளியில் சிற்றொளிகள் கலந்து சுடர்வீசின. அந்த பெருங்கடலில் சிறு ஆறுகள் தங்கள் அடையாளங்களைத் துறந்து ஒன்றிணைந்து கொண்டன. இயேசு தம் சீடர்களிடம் 'தம் சிலுவையை சுமக்காமல் என்னை பின்பற்றி வருவோர் என்னுடையோர் என்று கருதப்பட தகுதியற்றோர். தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்' (மத் 10:39) என்று சீடத்துவத்தின் மையமான பாடுகளைப் பற்றி விவரித்து துன்பத்தின் வழிதான் சீடத்துவம் என்று கற்பித்ததைக் கடைபிடித்து கடவுளுக்குள் தம்மை ஒன்றித்துக் கொண்ட நற்செய்திப் பணியாளர்கள்தான் சீடர்கள் .

'தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அழியாமல் நிலைவாழ்வு' (யோவா 3:15) பெற வேண்டும் என்ற உயரிய எதிர்நோக்கோடு கடவுள் தம் மகனையே அளிக்கும் அளவுக்கு உலகின் மேல் அன்பு கூர்ந்த கடவுளின் நிகரற்ற அன்புக்கு ஈடேது. அவரின் அன்பு மகனாகிய இயேசு துன்பத்தின் பாதையில், உச்சகட்ட வேதனைகளை, அவமானங்களைக் கடந்து தமது இன்னுயிரைத் தந்து இவ்வுலகிற்கு மீட்பையும் நிலைவாழ்வின் உறுதிப்பாட்டையும் அளித்தார் என்பதை எப்போதும் நம்மனதில் இருத்துவோம்.

**நமது பாடுகளும் பங்கேற்பும்:**

நமக்கு அளிக்கப்பட்ட அருட்சாதனங்கள் வழியாக தூய ஆவியார் நமக்குள் கொடுக்கப்பட்டுள்ளார். உறுதிப்படுத்தப்பட்டுள்ளார். நற்செய்திப் பணியாளராக

அர்ப்பணிக்கப்பட்ட நாம் தூய ஆவியாரின் முத்திரை பெற்றவர்களாகிறோம். பணி வாழ்வு மலர் கீரிடம் அல்ல அது முள்கீரீடம் அது குத்தும் இரத்தம் வழியச் செய்யும் வேதனைப்படுத்தும் சகிப்புத்தன்மையுடன் பொறுமை காத்து தாங்கி கொள்ளத்தான் வேண்டும். 'சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்களின் தகுதி மெய்ப்பிக்கப்படும் போது தம்மீது அன்பு கொள்வோருக்கு கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றிவாகையினை அவர்கள் (நாம்) பெறுவார்கள் (யாக் 1:12) என்ற வார்த்தையின்படி ஆசீர்வதிக்கப்படுவோம்.

துன்பம், வேதனை, பாடுகள் பட்டு சிலரது கணணீர்ப்பைகள் வற்றியிருக்கலாம். ஆனால் கடவுள் தம் தோற்பையில் நமது கண்ணீரை சேர்த்து வைத்திருப்பார். நமது துன்பம் இறைவனின் மாட்சியில் கொண்டு போய் சேர்க்கும் என்பதே நம் எதிர்நோக்காகட்டும். பொன்னை நெருப்பிலிட்டு புடமிடவது போல புடமிடப்படும் போது தடுமாறாத மனம், 'மானக்கேடு எனும் உலையிலிட்டு' (சீஞா 2:5) சோதிக்கப்படும் போது மனம் கசிந்து உடைந்து போகிறோம். இயேசுவின் அவமானங்கள் அவர் காறித் துப்பபட்டு ஆடை களையப்பட்டு. எச்சிலும், வியர்வையும், கண்ணீரும் வழிந்தோட அவர் நின்ற நிலைகளை நினைவில் நிறுத்துவோம். அப்போதுதான் எதையும் கடக்கும் மனத்துணிவு கிடைக்கும்.

புனித பவுலடியார் தமது பணிவாழ்வில் பட்ட துன்பங்களை விவரித்திருப்பதை நாம் அறிந்திருப்போம். தம்மை 'கிறிஸ்துவின் பொருட்டு மடையர்' என்றும் குப்பைகளானோம், கழிவுப்பொருளானோம் என்றும் சொல்லுவார். புனிதர்கள் துன்பத்தை மணமகளாக பார்த்தனர். சிலர் துன்பமில்லா நாளை கடவுள் என்னை இன்று அன்பு செய்யவில்லையோ என்று யோசித்தனர். பலரும் துன்பத்தைத் தோழானாக்கி கடந்து சென்றனர் இன்னும் எத்தனையோ சான்றுகள் நம் கிறிஸ்தவ வரலாற்றில் உண்டு.

பாடுகளில் பங்கேற்க 'கிறிஸ்துவின் விரிக்கப்பட்ட கரங்களின் மீது உங்கள் கண்களை நிலைநிறுத்துங்கள் நீங்கள் மீண்டும் மீண்டும் காப்பற்றப்பட உங்களையே ஒப்புக்கொடுங்கள். ஒவ்வொரு வீழ்ச்சிக்குப் பிறகும் நம்மை அவர் ஆரத்தழுவுகிறார்' என்று நம்மை தேற்றுகிறார் நம் திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள். எனவே, நாம் பெறப்போகும் விண்ணக மாட்சியை மனதில் கொண்டு 'என்ன நேர்ந்தாலும் இன்றும் என்றும் வாழ்விலும், சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப்படுத்துவேன். இதுவே என் பேராவல். இதுவே என் எதிர்நோக்கு' (பிலி 1:20) என்ற புனித பவுலின் எதிர்நோக்கோடு நமது எதிர்நோக்கை இணைத்து தொடர்ந்து பணி செய்வோம்.

நற்பணி **ஜெஸி. P.**

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | அணித்தலைவர்க்ள் பயிற்சி-I<br>அணித்தலைவர்க்ள் பயிற்சி-II | அமலஅன்னை அமைதியகம்<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 02 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி<br>தந்தை ஜோசப் சேவியர் அரங்கம்<br>காளையார்கோவில் |
| 05 | அருளமுது ஆதாரக்குழு<br>கூடுகை | அமைதியகம், காயாவயல்.<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 6-9 | நற்செய்திப் பெருவிழா<br>பரிந்துரை செபம் | ஆனந்தா அருங்கொடை இல்லம்<br>தேவகோட்டை ரஸ்தா. |
| 08 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம்<br>இடைக்காட்டூர் |
| 08 | புதிய பணியாளர்கள் பயிற்சி | குழந்தை தெரசாள் கோவில்,<br>தங்கச்சிமடம் |
| 09 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில்<br>இராமநாதபுரம்,<br>வியான்னி அருள்பணி மையம்,<br>சிவகங்கை,<br>புனித அருளான்ந்தர் திருத்தலம்,<br>ஓரியூர். |
| 09. | தவக்கால களப்பணி ஆரம்பம் | பங்குத்தளங்களில் |
| 16 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம்,<br>காயாவயல்,<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில்<br>சாயல்குடி |
| 23 | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில்,<br>இராஜசிங்கமங்கலம்<br>புனித அடைக்கல மாதா கோவில்<br>திருமயம் |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும்<br>மனிதருக்காக அல்ல; ஆண்டவருக்காகவே<br>செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள். | **கொலோசையர் 3:23** |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 02.03.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் |
| 02.03.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 08.03.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 09.03.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி |
| 09.03.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 09.03.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 16.03.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. பால்ராஜ் |
| 16.03.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 26.01.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 23.03.25 | அடைக்கமாதா கோவில் திருமயம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி J. அருள் இளங்கோ |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

சோம்பேறிக்குப் **பாயே** பகை.

வாயாடிக்கு **வாயே** பகை.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும்;
தம் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர். (நீதிமொழிகள் 10:19)

'அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்' (எபே6:25).

நற்செய்தி அறிவிப்பதற்காக நம்மை எவ்வாறெல்லாம் நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தொடர்ந்து தியானித்து வருகின்றோம். அதிலும் குறிப்பாக தகுந்த முறையில் நாம் நற்செய்தியை அறிவிப்பதற்கு நமக்கு கிறிஸ்து இயேசுவின் மனநிலை வேண்டும் என்று தியானித்து வருகின்றோம்.

ஒரு நல்ல சீடர் அவரது குருவைப் போல் வாழ முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் குரு விரும்பிய செயல்பாடுகளை சீடர் செய்ய முடியும். நம் குருவாகிய ஆண்டவர் இயேசு எத்தகைய மனநிலைகளில் இருந்து இறையாட்சிப் பணியை செய்தாரோ அத்தகைய மனநிலையை நாம் கொண்டிருந்தால்தான் நற்செய்தி அறிவிப்புப் பணியில் நிலைத்து நிற்க முடியும்.

இயேசு ஆண்டவர் புகழ்ச்சியையும் பெருமையையும் தேடாதவராகவும் அதை விரும்பாதவராகவும் இருந்தார். தன்னைப் பிறர் புகழும் போதும் இகழும் போதும் சமநிலையில் இருந்தார் என்று தியானித்திருக்கிறோம். அதேபோல் தான் செய்த நற்செயல்கள் பிறர் அறியா வண்ணம் மறைவாய் இருக்க வேண்டும் என்று விரும்பினார். தன்னுடைய நற்செயல்களுக்காக யாரும் தன்னைப் பாராட்டி விடக்கூடாது புகழ்ந்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் என்பது பற்றித் தியானிக்க இருக்கிறோம். மறைவாய் உள்ளதைக் காணும் தந்தையிடமிருந்து மட்டுமே தனக்கு மாட்சியும் புகழும் கிடைக்க வேண்டும் என்பதில் பெரு விருப்பம் கொண்டிருந்தார். 'தீய ஆவிகளும் அவரைக் கண்டபோதே அவர் முன் விழுந்து இறைமகன் நீரே என்று கத்தின. அவரோ தம்மை வெளிப்படுத்த வேண்டாம் என அவற்றிடம் மிகக் கண்டிப்பாச் சொன்னார்' (மாற்3:11-12). அவர் காலத்தில் வாழ்ந்த மறைநூல் அறிஞர்கள், பரிசேயர்கள், மறைநூலில் மெசியாவை பற்றிக் கூறப்பட்டுள்ள இறைவாக்குகளை அறிந்தவர்கள் எவரும் அவரை இன்னாரென்று அடையாளம் கண்டு ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். ஏனென்றால் இயேசுவின் பிறப்பின் பின்னணியை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மனிதர்களால் அடையாளம் காணப்பட முடியாத இயேசுவை தீய ஆவிகள் அடையாளம் கண்டு இறைமகன் நீரே என்று கத்தத் தொடங்கின. அதை விரும்பாத இயேசு தம்மை யாரென்று வெளிப்படுத்த வேண்டாம் என்று கண்டிப்பாகக் கட்டளையிடுகிறார். நாமும் நான் நற்செய்தி பணியாளர் என்று பெருமைப்படவோ அதற்கான அங்கீகாரத்தை தேடிக் கொண்டிருக்கவோ கூடாது. நாம் எதற்காக சென்றோமோ அந்தப் பணியை மட்டும் சிறப்பாகச் செய்து முடிப்பதில் ஆண்டவர் இயேசுவைப் போலிருக்க வேண்டும். இயேசு ஆண்டவர் நோயாளிகளை

குணப்படுத்திய பின் னும் விடுதலை வழங்கிய பின்னும் இதை யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று கண்டிப்பாக கட்டளையிட்டதை நாம் விவிலியத்தில் பல இடங்களில் வாசிக்கின்றோம். தொழு நோயாளி ஒருவரை குணப்படுத்திய இயேசு 'இதை யாருக்கும் சொல்ல வேண்டாம் கவனமாய் இரும்' (மாற்1:43) என்று கூறுகிறார். அதாவது நான்தான் செய்தேன் என்பதை யாருக்கும் வெளிப்படுத்த வேண்டாம் என்பதில் கவனமாக இருக்கச் சொல்கிறார்.


இயேசு தோற்றம் மாறியபின் மலையில் இருந்து சீடர்களோடு இறங்கி வந்து கொண்டிருந்தபோது மானிட மகன் இறந்து உயிர்த்தெழும் வரை நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக் கூடாது என்று அவர்களுக்கு கட்டளையிட்டார்(மாற்9:9). இயேசு ஆண்டவரின் இறைத்தன்மையை, மாட்சியைக் கண்ணால் கண்ட சீடர்கள் மூன்று பேரிடமும் (பேதுரு, யோவான்,யாக்கோபு) அவர்கள் கண்டதை அவர் இறந்து உயிர்த்தெழும்வரை எவருக்கும் சொல்லக்கூடாது என்று கட்டளையாகக் கொடுக்கிறார். சீடர்கள் தன்னை பெருமைப்படுத்தி விடக் கூடாது என்பதில் விழிப்பாய் இருந்தார் என்பதை அறிகிறோம்.

சில நேரங்களில் நற்செய்தி கூட்டங்களில் சாட்சி சொல்வதற்காக மக்களை மேடைக்கு அழைப்பார்கள். இந்த குணமளிக்கும் கூட்டத்தில் அவர்கள் பெற்ற சுகத்தை கூறச் சொல்வார்கள். சாட்சி கூறுகிறவர்களை போதகர் செபித்ததால் நான் குணமானேன் என்று சொல்லவைத்துப் பெருமை தேடிக் கொள்கிற நிகழ்வுகள் பல நடக்கின்றன. பலருக்குப் பாராட்டப்படுவதும் தான் பெருமையாகப் பேசப்படுவதும் ஒரு போதை போல் ஆகிவிட்டது. கிறிஸ்துவின் உண்மைச் சீடர்கள் புகழ் போதையில் இருந்து தப்பித்து ஓட வேண்டும்.

காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒரு மனிதனை குணப்படுத்தியபின் இதை எவருக்கும் சொல்ல வேண்டாம் என்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார் (மாற் 7:36) தான் செய்வதை பிறர் பெருமைக்குரிய காரியமாக எண்ணி தன்னைப் பெருமைப்படுத்தி விடக் கூடாது புகழ்ந்து பேசி விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். இது அவரது எளிய மனத்திற்கும் தாழ்ச்சிக்கும் அடையாளமாக இருக்கின்றது.

'பெருமை என்பது எனது மேலாடை, வல்லமை என்பது எனது கீழாடை. இதில் ஏதாவது ஒன்றில் எவனாவது என்னோடு போட்டியிட்டால் அவனை நரகத்தில் வீசுவேன்' என்று திருக்குரானில் கடவுள் சொல்வதாக எழுதப்பட்டுள்ளது. மக்கள் எல்லோரும் உங்களைப் புகழ்ந்து பேசும் போது ஐயோ உங்களுக்கு கேடு என்கிறார் ஆண்டவர் (லூக் 6:26). பிறர் நம்மை புகழ விரும்புவது நம் ஆன்மீக வாழ்விற்குக் கேடு என்பதை உணர்ந்தவர்களாய் பிறர் புகழ வேண்டும் என்று எதையும் செய்யாமல் நம்முடைய நற்செய்தி அறிவிப்புப் பணியைக் கண்டு மற்றவர்கள் இறைவனை போற்றிப் புகழும் படி வாழ்ந்து இயேசுவின் இறை ஆட்சிப் பணியைத் தொடர்வோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.



'உங்களுக்கு ஏற்படுகின்ற சோதனை பொதுவாக மனிதருக்கு ஏற்படும் சோதனையே அன்றி வேறு அல்ல கடவுள் நம்பிக்கைகுரியவர். அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார் சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வல்மையை உங்களுக்கு அருள்வார் அதிலிருந்து விடுபட வழி செய்வார் (1 கொரி 10 13).

புனித யோவான் கிளிமாக்கஸ் பாலஸ்தினத்தில் பிறந்தவர். அவருக்கு 16 வயது ஆனபோது சீனாய் மலையில் இருந்த துறவற மடத்தில் துறவியாகச் சேர்ந்தார். அங்கு அவர் செப. தவ வாழ்வில் தம்மை முழுமையாய் ஈடுபடுத்திக்கொண்டு இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

மடத்தில் இவர் துறவியாக வாழ்ந்த சமயத்தில் சாத்தான் இவரைப் பலவிதமாக சோதித்தது அத்தகைய சமயங்களில் இவர் இறைவனுடைய வல்லமையால் எல்லாவிதமான சோதனைகளையும் வெற்றிகொண்டார். யோவான் கிளிமாக்கஸ் எப்போதும் நாவை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்திருந்தார். அதனால் நிறைய பிரச்சனைகள் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டார். இவர் விவிலியத்தை நன்றாகக் கற்றுத்தெரிந்திருந்தார். அதனால் இவருடைய போதனையைக் கேட்பதற்கு துறவிகள். இறைமக்கள் என ஏராளமானோர் அவரது இருப்பிடம் தேடி வந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் ஆண்டவருடைய நற்செய்தியை மிக சிறப்பான முறையில் எடுத்துரைத்து வந்தார். இவர் எழுதிய நிறைவின் ஏணி (Ladder of perfection) என்ற புத்தகம் இன்றைக்கும் மக்களால் விரும்பிப் படிக்கக்கூடிய புத்தகமாக இருந்து வருகின்றது.

இவருக்கு 74 வயது நடக்கும்போது அவரை துறவு மடத்தின் தலைவராக ஏற்படுத்தினார்கள். ஆனால் அவர் அந்தப் பொறுப்பை விரும்பவே இல்லை. இருந்தாலும் அதனை இறைத்திருவுளமென ஏற்றுக்கொண்டு தன்னால் இயன்ற மட்டும் அப்பணியைச் சிறப்புடன் செய்து வந்தார். இவர் 649 ஆம் ஆண்டு. மார்ச் மாதம் 30 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

புனித யோவான் கிளிமாக்கசிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம் அவருடைய நாவடக்கம்தான். அவரைப் போன்று இறைப்பணியை சிறப்புடன் செய்வோம். நாவை அடக்கி ஆளக் கற்றுக்கொள்வோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## உடன் இருப்பு – அன்பின் மொழி




வழக்கம் போல் ராஜா பயணத்தில் இருந்தார். ராஜா என்கிற இந்த ராஜாமணி ஒரு தொழில் அதிபர் எப்போதும் எப்படி சம்பாதிப்பது எப்படி சேமிப்பது எதில் முதலீடு செய்வது என்ற எண்ணம்தான் இவரிடம் ஓடிக் கொண்டே இருக்கும். பலமுறை தன் மனைவி அழைத்தும் அவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவில்லை. முக்கியமான முதலீடு என்பதால் கவனம் பணத்திலும் போகும் பயணத்திலும்தான் இருந்தது. இரண்டு நாள் கழித்து வீட்டிற்கு போனபிறகுதான் தெரியவந்தது. தன்னுடைய மூத்தமகள் பிணவறையில் மருத்துவ சோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரால் அந்த அதிர்ச்சியை தாங்க முடியவில்லை. அடக்கம் முடிந்த பின்னர் தன் மகள் தற்கொலை செய்துகொண்டார் என்ற விஷயம் தெரிய வந்தது. அப்போது தன் மகள் உடன் இருக்கும்போது அடிக்கடி சொன்ன வார்த்தை ஞாபகத்திற்கு வந்தது. "அப்பா எங்க கூட இருங்க பகல் நேரத்தில் பள்ளி, மாலை வகுப்பு, வீடு திரும்பும்போது நீங்கள் என் உடன் இருந்தால் அதுவே எனக்கு போதும். எனக்கு ஆறுதல் தரும் நீங்கள் என் கண்ணில் படுவதில்லை. ஆனால் என் மன அழுத்தம் தரும் சிலர்தான் என் கண்ணில் பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்." ஆனால் அப்போது அதை அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது மகளுக்காக வாங்கி வைத்த வீடு, நிலம், கிலோ கணக்கில் தங்க நாணயங்கள், அவள் புகுந்த வீட்டில் மகிழ்ச்சியாக இருக்க தேவையான அனைத்தும் தயார். அயல்நாட்டில் படிக்க எல்லா ஏற்பாடும் நிறைந்துள்ள அந்த இடத்தில் மகள் மட்டும் உயிரோடு இல்லை.

மேல்சொன்ன இந்த நிகழ்வில் அப்பாவின் அன்புமொழி பொருட்களை சம்பாதித்து வசதியான மாளிகையில் தன் மகளை வைத்து அழகு பார்ப்பதாகும். ஆனால் மகளின் அன்புமொழி உடனிருப்பு. அதை தனக்கு பிடித்த நபர்களிடம் இருந்து பெறாத போது தனது வாழ்வையே முடித்துக்கொண்டாள். உடனிருப்பு மிக அவசியமானது.

## உண்டியலை உடைக்கு உடனிருப்பு :

அயல் நாட்டில் தன் ஒரே மகனுடன் குடும்பமாக வேலை செய்து வந்த சேகர் தினமும் அதிகாலையில் வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் வீடு திரும்புவார். சனி, ஞாயிறு அதிக நேரம் வேலை செய்வதால் வீட்டிற்கு வருவதில்லை. ஆனால் சனி, ஞாயிறுதான் சேகரின் மகனுக்கு பள்ளி விடுமுறை தனக்கு பிடித்த சைக்கிளை தன் பணத்தில் வாங்க வேண்டும் என ஆசைப்பட்ட சேகரின் மகன்

தன் பாட்டி கொடுத்த உண்டியலில் தன் அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் தரும் பணத்தை அதில் சேர்த்து வைத்தான். ஒரு நாள் படுக்கையில் இருந்து எழுந்து வந்த சேகரின் மகனுக்கு அன்று ஞாயிற்று கிழமை என்ற நினைவு வந்ததும் தன் அப்பாவை கட்டி அணைக்க முயலும்போது அவர் மின்னல் வேகத்தில் தனது காரை நோக்கி சென்றார். உடனே இவனும் கையில் எதையோ எடுத்துக்கொண்டு பின்னால் ஓடினான். தன் அப்பாவின் காரை நிறுத்தி "அப்பா உங்களுக்கு ஒருமாத சம்பளம் எவ்வளவு? ஒரு வார சம்பளம் எவ்வளவு? சரி ஒருமணி நேரத்திற்கு உங்கள் சம்பளம் எவ்வளவு?" என கேட்க. அதற்கு அந்த தந்தை "எனக்கு ஒரு மணி நேரத்திற்கு 200 டாலர் எனசொல்ல" உடனே அவன் தன் கையில் இருந்த உண்டியலை உடைத்து அதில் இருந்த எல்லா பணத்தையும் கையில் காமித்து "அப்பா இந்த பணத்தையெல்லாம் வைத்துக் கொண்டு ஒரு ஒரே மணி நேரம் என்னோடு இருந்து விளையாடிவிட்டு உங்கள் ஆபிஸ்க்கு போங்க" என்றான்.

**மிருகத்தையும் மிருதுவாக்கும் உடன் இருப்பு :**

அந்த பண்ணை வீட்டில் இருந்த மாடு கன்று ஈன்று ஒரு வாரத்தில் கன்று குட்டி இறந்து போனது. அதனால் அந்த மாடு பால்சுரக்க வில்லை. எனவே இறந்து போன கன்று குட்டியின் தோலை வைத்து பொம்மையாக அந்த கன்றுகுட்டியை நிறுத்த அந்த பசு பால் சுரக்க தொடங்கியது. தனது கன்று தன் உடன் இருக்கிறது என்ற உணர்வோடு.

**விவிலிய பின்னணி :**

- இயேசு தன் சீடர்களோடு எப்போதும் இருப்பேன் என உறுதியளித்தது. (மத் 28:20)
- இயேசு மார்த்தா, மரியா இல்லத்திற்கு செல்லுதல் (லூக் 11:27-28)
- எம்மாவுஸ் செல்லும் சீடர்களோடு உடன்பயணித்த இயேசு (லூக் 24:28-29)
- அழுவாரோடு அழுகுங்கள். சிரிப்பாரோடு சிரியுங்கள் (உரோ 12:15).
- ஒருவர் ஒருவரின் சுமைகளை தாங்கிக் கொள்ளுங்கள். (கலாத்தியர் 6:2)
- ஒன்றாக இணைந்து வருவதை கைவிடாதீர்கள் (எபிரேயர் 10:25)

**நடைமுறை செயலாக்கம் :**

1. **குடும்ப நேரம்** : குடும்பத்திற்கான நேரத்தை ஒதுக்கவேண்டும்.
2. **குடும்ப மனமகிழ்வு நேரம்** : குடும்பங்கள் ஒன்றான இணைந்து பொழுதுபோக்கு நிகழ்வில் பங்கேற்றல்.
3. **ஒரு நேரத்தில் ஒருவர்** : தந்தை தன் ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட நேரத்தை செலவு செய்யவும்.

**அசைபோட அரை நிமிடம்:**

உண்மையான உடன் இருப்பாள். உடன் பிறப்பாவோம்.

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர். பரமக்குடி.

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- சோர்ந்த உள்ளங்களுக்கு நான் புத்துயிர் அளிப்பேன். வாடிய நெஞ்சங்களுக்கு நான் நிறைவளிப்பேன் என்பதை மறந்து, சோர்ந்து போய் இருக்கும் நேரங்களில் உண்மை இறைவனைப் பற்றிக்கொள்ளாமல் மாற்று தெய்வ வழிபாடுகளில் ஈடுபட்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (எரே 31:25).
- கொலை, செருக்கு, மதிகேடு, காமவெறி, பேராசை, பொறாமை, வஞ்சகம், களவு, விபச்சாரம், பழிப்புரை, தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரை தீட்டுப் படுத்துகின்றன என்பதை அறிந்தும், என் மனதில் இத்தீமைகளுக்கு இடம் கொடுத்து வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (மாற்கு 7:21-23).
- ஆண்டவரே உமது கை, என்னை நடத்திச் செல்லும், உமது வலக்கை என்னைப் பற்றிக்கொள்ளும் என்பதை அறிந்தும் தெரிந்தும், ஆண்டவரின் உடனிருப்பை உணராமல் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திபா 139:10).
- உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடை சூழ்ந்து வரும் என்பதை தெரிந்திருந்தும், இந்த வாக்குறுதியை மறந்து அவநம்பிக்கையோடு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திபா 23:6).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- அமைதியின்றி வாழும் குடும்பங்களுக்காக
- பிரிந்த குடும்பங்களில் ஒற்றுமை உருவாகி இணைந்து வாழ
- திருத்தந்தையின் உடல் உள்ள நலன்களுக்காக
- அரசுத் தேர்வு எழுதும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக.
- இந்தியாவில் சனநாயம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி ஆகிய கோட்பாடுகள் காக்கப்பட்டு நாட்டில் நீதியும், ஒற்றுமையும் மேலோங்க.
- யூபிலி ஆண்டின் தவக்காலம் இறைவனின் அருள் இரக்கத்தை பெற துணை புரியும் காலமாகிட
- நற்செய்தி பணியாளர்களின் தவக்கால களப்பணிகள் இறைவன் விரும்பும் கனி கொடுக்கும் அருள் நிகழ்வுகளாகிட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- பிரிந்த குடும்பங்கள் இணைய செபித்தல், இணைய முயற்சி எடுத்தல்.
- நமக்கு வரும் துன்பங்களை அமைந்த மனதுடன் ஏற்று வாழப் பழகுதல்

விரிவாக்க உள்ளுயிர் குழுக் கூட்டம்

அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை -

அருள்சான்று நிலையம்





## வட்டாரத் தியானக் கூட்டங்கள்











படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **1 திமோத்தேயு 2-4 அதிகாரங்களுக்குள்**











புதுக்கோட்டை வட்டாரத் தியானக் கூட்டம்



பரமக்குடி வட்டாரத் தியானக் கூட்டம்

## புதிய பணியாளர்கள் பயிற்சி



காளையார்கோவில்



அமைதியகம்



சாயல்குடி



அருள்சான்று நிலையம்



ஆர்..எஸ்.மங்கலம்



திருமயம்

**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com